ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. செ. மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்:697/மாஒ6/SMC/ஒபக/2023-2024, நாள்:29.04.2024**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – 2024, மே மாதம் 3ஆம் நாள் (வெள்ளிக்கிழமை) அன்று – அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் – சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1342/A11/பமேகு/ ஒபக/2024, நாள்: .04.2024.

*******

பார்வையில் காணும் சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அனைத்து வகை அரசு பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டமானது மாதந்தோறும் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நடத்தப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் (2023-2024) பொதுத்தேர்வு சார்ந்து 10, 11, 12-ஆம் வகுப்பு மாணவர்களில் தேர்வுக்கு வாராதவர்கள் எவரென கண்டறிவதற்கும், தேர்வு எழுதி தேர்ச்சி பெறாத மாணவ, மாணவியர்கள் துணைத் தேர்வு எழுத ஊக்கப்படுத்துவதற்கும், தேர்ச்சி பெற்றவர்கள் உயர்கல்வி குறித்தான வழிகாட்டுதல்களை பெறுவது குறித்தும், விழிப்புணர்வு வழங்குவது சார்ந்தும், பள்ளித் தேவைகளுக்கான நன்கொடைகள் முறைப்படுத்துதல் சார்ந்தும் கலந்துரையாட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புக் கூட்டமானது 03.05.2024 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை அவசியம் நடத்த அறிவுறுத்தப்படுகிறது.**

## சிறப்புப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டப் பொருள் நிரல்கள்

**அ) “நான் முதல்வன்” உயர்கல்வி வழிகாட்டி:**

2022-2023ஆம் கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதிய 3,99,938 அரசுப் பள்ளி மாணவர்களில், 2,41,177 (60%) மாணவர்கள் பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்று உயர்கல்வி பயின்று வருவதை UMIS (University Management Information System) வாயிலாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதற்கான முக்கிய முயற்சிகளையும், பங்களிப்பையும் வழங்கிய அனைத்துப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கும் பள்ளிக் கல்வித் துறையின் பாராட்டுகளும், வாழ்த்துக்களும் பார்வையில் காணும் செயல்முறைகளில் உரித்தாக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக, இக்கல்வியாண்டில் (2023-2024) அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டி குழுவின் முதல் கட்டத் திட்டமிடல் கூட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய

தீர்மானங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் குறித்த கூடுதல் விவரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

1) பள்ளியளவில் நடைபெறக் கூடிய திட்டமிடல் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர்/துணைத் தலைவர் கலந்து கொண்டு **உயர்கல்வி வழிகாட்டிக் குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள்** என்னவென்பதை தலைமையாசிரியர்களின் வாயிலாக உறுப்பினர்கள் அறிந்து செயல்படக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கொடுக்கப்பட்டுள்ள QR Codeஐ ஸ்கேன் செய்து உயர்கல்வி வழிகாட்டிக் குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் பங்களிப்புகள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

2) உயர்கல்வியில் சேர எதிர்நோக்கிக் காத்திருக்கும் மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்குச் சிறந்த முறையில் வழிகாட்டிட பல தகவல்கள் தேவைப்படும். எனவே, அவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக ஒருநாள் பயிற்சியானது உயர்கல்வி வழிகாட்டிக் குழு உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் உத்தேசமாக மே மாதம் முதல் வாரத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

3) பள்ளிகளில் 2024 மே மாதம் 6-ஆம் தேதி முதல் நடக்கவிருக்கும் உயர்கல்வி வழிகாட்டி முகாமிற்கு வராத 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ, மாணவியரின் விவரங்களை தலைமையாசிரியரிடம் பெற்று அம்மாணவர்களின் வீட்டிற்கே சென்று மாணவர்களைப் பள்ளிக்கு வரவழைத்து பயன்பெற பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4) மேலும், **"உயர்கல்வியை அறிவோம்"** என்ற நிகழ்ச்சியின் வாயிலாகப் பல்வேறு உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் கல்லூரிகளில் சேருவதற்கான வழிமுறைகள் குறித்து சார்ந்த துறைகளின் வல்லுநர்கள் மூலம் நேரடி மற்றும் பதிவு செய்யப்பட்டக் காணொளிகள் கல்வி தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படுகிறது. காணொளிகளை கொடுக்கப்பட்டுள்ள QR Code ஸ்கேன் செய்து கண்டு பயனடையலாம்.

5) "உயர்கல்வியை அறிவோம்" நிகழ்வின் முக்கியத்துவத்தை மாணவர்களின் பெற்றோர்களுக்கு எடுத்துரைத்து மாணவர்களை இந்த நிகழ்வில் நேரடியாக அல்லது கல்வித் தொலைக்காட்சி வாயிலாக கண்டு பயனடைய ஊக்கமளிக்க வேண்டும்.

6) உயர்கல்விக்குத் தேவைப்படும் சான்றிதழ்கள் இல்லாத மாணவ, மாணவியரின் பட்டியலைத் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று பள்ளிக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தில் விண்ணப்பித்து சான்றிதழ்களைப் பெற வழிகாட்டிட பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், துணைத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவ்வாறு பயன்பெறும் மாணவ, மாணவியரின் விவரங்களையும், பயன்பெற இயலாதவர்களின் விவரங்களையும் தலைமையாசிரியர் வாயிலாக உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் தெரிவிக்கவும்.

7) 2024, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறவிருக்கும் 12ஆம் வகுப்பு துணைத் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மற்றும் துணைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவியரின் விவரங்களை தலைமையாசிரியரிடமிருந்து பெற்று, அவர்களின் வீட்டிற்கே சென்று அவர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் உயர்கல்வி பெறுவதற்குத் தேவைப்படும் உதவிகள் என்னவென்பதை கண்டறிந்து பெறப்பட்ட தகவல்களை தலைமையாசிரியர் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியரிடம் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், இல்லம் தேடிக் கல்வியாளர் உதவியுடன் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ளீடு (Scan QR Code) செய்ய கேட்டுக்கொள்ள வேண்டும்.

"நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் அரசு பள்ளி மாணவர்கள் அனைவரும் உயர்கல்வியில் சேர்வதை உறுதிசெய்ய உயர்கல்வி சார்ந்த செயல்பாடுகள் மற்றும் உரிய தகவல்களை பெற்றோர்களிடையே கொண்டு சேர்த்திடுவோம்.

**ஆ) அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் [All Children in Schools - ACiS]**

- நூறு சதவிகித பள்ளி சேர்க்கையை உறுதி செய்தல்.
- Elementary Education Register (EER) மேம்படுத்தும் செயல்பாடுகள் சரியாக நடைபெறுகிறதா என்பதை சரிபார்த்தல்.
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி அடையாத மற்றும் தேர்வுக்கு வருகை புரியாத மாணவர்கள், தங்களது பள்ளியின் பயிற்சி மையங்களில் சேர்ந்து பயில்வதையும், தொடர்ந்து வரும் துணைத் தேர்வு (Supplementary Exam) எழுதுவதையும் உறுதி செய்தல்.

**இ) நம்ம ஸ்கூல், நம்ம ஊர் பள்ளி [Namma School-Namma Ooru Palli - NSNOP]**

1) இதுநாள் வரையில், **"Namma School-Namma Ooru Palli"** WhatsApp Channel வழியாக தங்கள் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி பகிர்ந்தளிப்பு விவரங்கள், தொடங்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதன் தற்போதைய நிலை சார்ந்த தகவல்களைப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாட வேண்டும்.
2) இனிவரும் காலங்களில், பள்ளிக்கானத் தேவைகளைப் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி SMC Parent App-இல் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பள்ளிக்கான நன்கொடைகள் NSNOP வாயிலாக முறைப்படுத்தி நிறைவேற்றப்படும் என்ற தகவலை பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**வழிகாட்டுதல்கள்:**

**பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் – பார்வையாளர்கள்**

4

மாவட்டக்கள அலுவலர்கள் (APO, APO(Ele.), DEO(S&E)s, BEOs, DC, DIET faculties) பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் – பார்வையாளர்களாக பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புக் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி சிறப்புப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூட்டம் நடைபெற்று முடியும் வரை பார்வையாளர்கள் பள்ளியில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.
- பின்பற்ற வேண்டிய அனைத்து வழிமுறைகளையும், கூட்ட நிகழ்வையும் பார்வையாளர்கள் முன்கூட்டியே அறிந்து பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புக் கூட்ட நாளன்று பிற்பகல் 2.00 மணியளவில் பார்வையாளர்கள் பள்ளிக்குச் செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- தேவைப்படும் பட்சத்தில் கூட்டம் சார்ந்த நிகழ்வில் பார்வையாளர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். (வருகைப் பதிவு, திட்டமிடல், செயலி சார்ந்த செயல்பாடுகளில்)
- சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட பார்வையாளர்கள், தங்களது பின்னூட்டத்தை பெற்றோர் செயலியில் உள்ள பார்வையாளர் படிவம் மூலம் கூட்ட நாளன்றே இரவு 8.00 மணிக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிறப்பான முறையில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் நடத்திட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இணைப்பு:**

1. பள்ளி மேலாண்மைக் குழு – சிறப்புக் கூட்ட நிகழ்வு அட்டவணை
2. நிலையானக் கூட்டப்பொருள் நிரல் - காணொளி

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

**பெறுநர்:**

1. இராணிப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்.
2. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் & ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.

## இணைப்பு-1

### பள்ளி மேலாண்மைக் குழு – சிறப்புக் கூட்ட நிகழ்வு அட்டவணை

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 - 3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் குழு உறுப்பினர்கள் அனைவரும் பள்ளி வளாகம், வகுப்பறை, கழிவறை, குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பார்வையிடுதல் | 10 நிமிடங்கள் |
| 3:10 - 3:15 | ஊக்கமூட்டும் காணொலிகள் திரையிடல் | செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் விதம் பள்ளி மேலாண்மைக் குழுக் குறித்தக் காணொலிகளைத் திரையிடுதல் | 5 நிமிடங்கள் |
| 3:15 - 3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகையைக் கைப்பேசி செயலியில் தலைவரால் பதிவு செய்யப்படுதல் | 5 நிமிடங்கள் |
| 3:20 - 3:25 | வரவேற்பு | கூட்ட அழைப்பாளரான தலைமை ஆசிரியர் உறுப்பினர்களை வரவேற்றுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்தல். | 5 நிமிடங்கள் |
| 3:25 - 3:35 | இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் பங்கேற்பு | பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் நாளன்று 3 இல்லம் தேடிக் கல்வித் தன்னார்வலர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து அவர்கள் சார்ந்த மையத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு, கற்றல் அடைவு மற்றும் அடுத்த இரண்டு மாதத்திற்கானச் செயல் திட்டம் குறித்துக் கலந்தாலோசித்தல். | 10 நிமிடங்கள் |
| 3:35 - 3:55 | திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | • கூட்டத்தின் நோக்கத்தை தலைமை ஆசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>• மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள் நிரல்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருள் நிரலை தயாரித்தல்.<br>• கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்களை வாசித்தல். | 20 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| | | • வேறு முக்கியத் தவிர்க்க இயலாதக் கூட்டப் பொருள் நிரல்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்துச் சேர்த்துக் கொள்ளுதல்.<br>• முந்தையக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஒவ்வொன்றாக வாசித்து அதன் தற்போதைய நிலை, முன்னேற்றம், சவால்கள் ஆகியவற்றை விவாதித்துத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்துத் தீர்மானித்தல் | |
| 3:55 - 4:25 | • கூட்டப் பொருள் நிரல் (meeting agenda) மீதான விவாதம்<br>• தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள் நிரல்கள் ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• மேற்கொள்ளப்பட்டத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியளவு, நிதி ஆதாரம், பொறுப்பாளர்கள், தொடர்புடையத் துறைகளின் ஒத்துழைப்பு, செயலை முடிப்பதற்கான கால அளவு ஆகியவற்றை நன்கு திட்டமிட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தீர்மானங்களைத் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 30 நிமிடங்கள் |
| 4:25 - 4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |

**இணைப்பு-2:**

Scan the QR Code: பள்ளி மேலாண்மைக் குழுவின் ஒவ்வொரு மாதாந்திரக் கூட்டத்திலும் கட்டாயமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலையானக் கூட்டப்பொருள் நிரல் (Standard Meeting Agenda) காணொளி வடிவில்.